S.M.Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
580. HOSPITAL ROAD, NEAR BANK OF CEYLON JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

கண் வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யும் கண்ணாடி களைச் சரியாகக் கொடுப்பவர்கள்.
எஸ்.எம்.பெர்ணாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஹூ சித்திரை மீ 27 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 14 (10-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 82

## யாழ். மருத்துவ பீடத்திற்கு

# புதிய போதனா ஆஸ்பத்திரி

# 14 ஆம் திகதி தலைவிதி தெரியும்

## இறுதிமுடிவு எடுக்க கொழும்பில் மாநாடு

— உதயன் கொழும்புச் செய்தியாளர் —

கொழும்பு, மே. 10

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குத் தனியான போதனா வைத்தியசாலை ஒன்றை நிறுவுவதில் உள்ள தடங்கல் நிலை தீருமா?

இது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக எதிர் வரும் 14 ஆம் திகதி கொழும்பில் நடக்கும் உயர்தர மாநாட்டில் அதன் தலைவிதி தெரியவரும்.

பிரஸ்தாப மாநாட்டில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் யாழ். மருத்துவபீட அதிகாரிகள், சுகாதார அமைச்சு உயர் அதிகாரி கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இத்தகவலை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுனா அலுவிகார உதயனுக்குத் தெரி வித்தார்.

மாநாட்டில் சாதகமான நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இது சம்பந்தமாக பேராசிரியர் அர்ஜுனா தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் சனத் தொகைக்கு அங்குள்ள வைத்தியசாலைகள் போதாது. இப்போது இயங்கும் வைத்தியசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். பேராதனைப் பல்கலைக்கழகப் போதனா வைத்தியசாலை போன்று யாழ்ப்பாணத்துக்கும் வைத்தியசாலை வேண்டும்—என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, ருகுனு பல்கலைக் கழகங்களில் இந்த வசதியில்லை. பேராதனை மருத்துவ பீடப் போதனா வைத்தியசாலையும் சுகாதார அமைச்சின் கீழேயே இயங்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளவத்தையில் குண்டு வெடிப்பு

கொழும்பு, மே 10

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள மதுபானக் கடை ஒன்றில் குண்டு ஒன்று வெடித்தது. இதில் யாரும் காயமடையவில்லை. [ஒ-எ]

### பாஸ்போர்ட் விண்ணப்பப் படிவம் இல்லை

யாழ்ப்பாணம், மே 10

யாழ். செயலகத்தில் பாஸ்போர்ட் பிரிவு இயங்கிய போதும் விண்ணப்பப்படிவங்கள் இல்லாததால் மக்கள் பெரும் அல்லற்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

கடந்த இரு வாரங்களாக இயங்கிவரும் இந்தப் பிரிவில் ஏராளமான விண்ணப்பங்கள் தினமும் சேர்க்கப்படுகின்றன.

படிவம் இல்லாததால் வெளியில் ரூ. 10 முதல் 15 வரை கொடுத்தே படிவம் வாங்கவேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

### ரயில் மோதி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற யாழ் தேவி மோதி ஒருவர் மரணமானார்.

நேற்றுக்காலை 9 45 மணி அளவில் யாழ் - கச்சேரிக்கு அண்மையில் உள்ள ரயில்வே கடவைக்கு சமீபமாக இச்சம்பவம் இடம் பெற்றது.

இதனால் யாழ்தேவி 10 45 மணிக்கே யாழ்.நகரை விட்டு கொழும்பு நோக்கி புறப்பட்டது. (இ-9)

### புனரமைப்பு கடன் வழங்கும் வேலை துரிதம்

இலங்கை வங்கி புனரமைப்புக் கடன் வழங்கும் வேலைகளைத் துரிதப்படுத்தியுள்ளது.

புனரமைப்புக் கடன் வழங்குவதில் இருந்த சில தடைகளை வங்கி தளர்த்தியதாலும், காணிப்பதிவகம் செயற்படுவதாலும் துரிதமாக இந்தக் கடன்களை வழங்கக் கூடியதாக இருப்பதாக வங்கி அதிகாரி தெரிவித்தார்.

## சிற்றூர்கள் தோறும் தமிழீழ இணக்க மன்றுகள்

### அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 10

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அனுசரணையுடன் தமிழீழப் பகுதிகளில் சிற்றூர்கள்தோறும் 'தமிழீழ இணக்க மன்றுகள்' அமைக்கப்படவிருக்கின்றன.

இதுதொடர்பான விளக்க அறிக்கை ஒன்றை முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ளது.

[இந்த அறிக்கையின் முழு விவரம் நாளைய உதயனில் பிரசுரமாகும்]. [உ]

## புயலின் கண்ணுக்குள் இந்தியக் கப்பல் சிக்கியது; 62 பேருக்கு என்ன நடந்தது?

இந்தியாவின் சரக்குக் கப்பல் ஒன்று வங்காள விரிகுடாவில் புயலின் 'கண்'ணுக்குள் சிக்கிக்கொண்டிருப்பதாக நேற்று இரவு இந்திய வானொலி அறிவித்தது.

அந்தக் கப்பலில் 62 பேர் இருந்தனர் என்றும் அச்செய்தி தெரிவித்தது.

கப்பல் பற்றிய மேலதிக விவரங்கள் எதுவும் அப்போது தெரியவரவில்லை. (அ-எ)

## 4 எதிர்க் கட்சிகள் அரசு மீது கண்டனம்

கொழும்பு, மே 10

ஏற்கனவே கொலைப் பயமுறுத்தலுக்கு ஆளாகியிருந்த சாம் தம்பிமுத்துவை காப்பாற்ற அரசு தவறிவிட்டது. இந்த கொலையின் பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்.

இப்படி நான்கு எதிர்க்கட்சிகள் கூட்டமாக அரசு மீது கண்டனம் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோசலிச முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவையே இந்த 4 கட்சிகளும் ஆகும்.

இவற்றின் தலைவர்கள் நேற்று நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் கூடினர்.

அப்போது பின்வருமாறு கூட்டாகத் தெரிவிக்கப்பட்டது:-

சாம் தம்பிமுத்துவின் மனிதாபிமானமற்ற கொலையைக் கண்டிக்கிறோம்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பிமுத்துவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி உட்பட பலர் அஞ்சலி

கொலையுண்டமட்டக்களப்பு எம்.பி சாம் தம்பிமுத்துவின் பூதவுடல் நேற்றுக் காலை சிராவஸ்தியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அச்சமயம் ஜனாதிபதி உட்பட பல கட்சித் தலைவர்கள் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

அவரது பூதவுடல் பொரளை ஏ எவ். றேமண்ஸில் இருந்து நேற்றுக் காலை எடுத்துச் செல்லப்பட்டு சிராவஸ்தியில் வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா, கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி, வடக்கு கிழக்கு மாகாணசபை ஆளுநர் நளின் செனவரத்தினா, சபாநாயகர் எம். எச் மொகமட், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப். அஷ்ரப், அத்தாவுட செனவரத்தினா உட்படசுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அஞ்சலி செலுத்தினர்கள்.

இன்று வியாழக்கிழமை எதிர் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா இறுதி அஞ்சலி செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-2-3)

## பூதவுடல் இன்று தகனம்

கொழும்பு, மே 10

கொலையுண்ட சாம் தம்பிமுத்துவின் பூதவுடல் இன்று மாலை 3-30 மணிக்கு கனத்தையில் தகனம் செய்யப்படும்.

சிராவஸ்தியில் வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடல் இன்று பகல் 2 30 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு 3-30 மணிக்கு தகனம் செய்யப்பட இருக்கிறது.

காலஞ்சென்ற தம்பிமுத்து ஒரு கிறிஸ்தவராக இருந்த போதும் கிறிஸ்தவ முறைப்படி அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்படமாட்டாது என்று ஈ. பி. ஆர். எல். எவ். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. யோகசங்கரி தெரிவித்தார்.

இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள ஈ. பி. ஆர். எல். எவ். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பிரேமச்சந்திரன் கொழும்பு வந்துள்ளார்.

ஷப்றா—உதயன் அனுசரணையுடன்

## மருதனார்மடத்தில் இன்று மாட்டுவண்டி சவாரி போட்டி

### சுன்னாகத்தில் கலை நிகழ்ச்சிகள்

மயிலணி, மே 10

மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப்போட்டி ஒன்று மருதனார்மடம் சந்திக்கு அருகாமையில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

இச்சவாரிப் போட்டியில் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சுமார் ஐம்பது சவாரி வண்டிகள் பங்குபற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று காலை 11-00 மணிவரையும் போட்டியில் கலந்து கொள்ள விருப்பமுள்ள ஏனைய வண்டிற்காரர்களும் பதிவு செய்து கொள்ளலாம் என்று அமைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மருதனார்மடத்தில் நடக்கும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டிகளைத் தொடர்ந்து சுன்னாகம் சந்தை மைதானத்தில் விழாவும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மாட்டு வண்டில் சவாரிப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பத்தாயிரம் வாத்திமாருக்கு இனித்தான் பயிற்சி அளிக்கப் போகினமாம். அப்ப அந்த நேரத்திலை உவையிட்ட படிக்கிற பிள்ளையள் ஆரிட்டை பாடங்களிலை பயிற்சி எடுக்கிறது ... ...?

## வடக்கு - கிழக்கில் உள்ள 10,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி

கொழும்பு, மே 10

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு உடனடியாகப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

துணைக் கல்வி அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆறு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மூலமாகவும் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன் பேசியுள்ளேன். விரைவில் புதிய திட்டத்தின்படி பயிற்சி அளிக்கப்படும் - இவ்வாறு திருமதி புலேந்திரன் தெரிவித்தார். (அ-2-3)

### ஆசிரியர்களுக்கு

## வருட இறுதியில் இடமாற்றம்

பாடசாலை "ஆசிரியர்களுக்கு இவ் வருட இறுதியில் அகில இலங்கை மட்டத்திலான இடமாற்றத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்" கல்விச்சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் திரு ஜோர்ஜ் மென்டிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஓர் ஒழுங்கு முறையின் கீழ் இந்த இடமாற்றத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், இடமாற்றங்களை வருடஇறுதியில் நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### மொரட்டுவ வியாபாரிகள்

யாழ்ப்பாணம், மே 10

பலவருட இடைவெளியின் பின்பு மொரட்டுவ சிங்கள வியாபாரிகள் யாழ்ப்பாணத்தில் மீண்டும் வீட்டுத் தளபாட வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். [இ-3]

### சுபநேரம்

10-05- 1990

வியாழக்கிழமை சித்திரை 27

சுபநேரம்

07-24 முதல் 08-54 வரை

இராகுகாலம்

01-24 முதல் 02-54 வரை

### கனடாவிலிருந்து தமது தாய்நாட்டுக்கு

# திரும்ப மறுக்கும் அகதிகளுக்கு உணர்விழக்கச் செய்யும் மருந்து!

## குடியகல்வு அதிகாரிகள் ஏற்றுகிறார்களாம்

தாய்நாடு செல்ல மறுத்து முரண்டு பிடிக்கும் அகதிகளுக்கு கனேடிய குடியகல்வு அதிகாரிகள் உணர்வு இழக்கச் செய்யும் மருந்து (Tranquilizer) ஏற்றுகிறார்களாம்.

இதனை கனடா குடியகல்வுக்குப் பொறுப்பான பெண் அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

நீண்ட காலமாக இந்த முறையை கனடாவின் குடியகல்வு அதிகாரிகள் கடைப்பிடித்து வருகின்றனர் என்றும் அந்த அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

'அப்படிச் செய்வதில் என்ன தவறு உண்டு?' -என்று அந்த அமைச்சர் திருப்பிக் கேட்டார் என்றும் பி. பி. சி. வானொலி நேற்று அறிவித்தது.

அகதிகள் அந்தஸ்து பெறுவதற்குத் தகுதியற்ற அகதிகளை கனடா அதிகாரிகள் அவர்களின் சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பி வருகின்றனர். சில அகதிகள் முரண்டுபண்ணி விமானத்தில் ஏற மறுக்கின்றனர். அப்படியானவர்களுக்கு கனடா குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் உணர்விழக்கச் செய்யும் மருந்துகளை ஏற்றுகின்றனர்.

மருந்து ஏற்றப்பட்டதும் அந்த அகதிகள் அமைதி அடைகின்றனர்.

இந்த நடைமுறை மனித உரிமை மீறல் என்றும் ஐ நா. அகதிகள் சாசனத்துக்கு முரணானது என்றும் கனடாவில் உள்ள பொதுநல அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது குறித்து பூரண விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடும்படி கனடா அரசுக்கு வேண்டுகோளும் விடுக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

# புலிகளுடன் பேச யாழ். செல்லுமாறு ஹமீத்துக்கு அவசரமாக உத்தரவு!

## தொலைபேசி மூலம் ஜனாதிபதி விடுத்தார்

கொழும்பு, மே 10

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உடனடியாக யாழ்ப்பாணம் செல்லுமாறு அமைச்சர் ஏ. ஸி எஸ் ஹமீத்துக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அவசர உத்தரவு ஒன்றை விடுத்துள்ளார்.

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் அமைச்சர் ஹமீத்துடன் ஜனாதிபதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த உத்தரவை விடுத்தார்.

அமைச்சர் ஹமீத் மருத்துவ சிகிச்சைக்காக தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருப்பது தெரிந்ததே.

அங்கிருந்து உடனடியாக கொழும்பு திரும்பி, யாழ்ப்பாணத்துக்கு செல்லுமாறு ஜனாதிபதி அமைச்சர் ஹமீத்தைப் பணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளுடன் அவசர பேச்சுக்களை நடத்தவேண்டியது அவசியம் என ஜனாதிபதி கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பித்தளைப் பாத்திரங்கள் கோவில் தேவைகளுக்கும் மற்றும் சமையல் தேவைகளுக்கும் பாவிக்கக் கூடியவை. விற்பனைக்குண்டு. சரஸ்வதி (மலாயன் கபே அருகில்) 55, பெரியகடை, யாழ்ப்பாணம். (3443)

3 பேஸ் 3. H-Pமோட்டார் 3, பேஸ் 2, H p. மோட்டார் அலுமினியம் ஸ்பினிங்மெசின் அலுமினியம் பொலிசிங் மெசின் ஸ்ராட்டர் S.J. யோக்கிம்பிள்ளை15/21 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (13128)

வயலின் (ஜெர்மன்) கருவிப் பெட்டி, Tape Recorder Yashica I 20 கமெரா Dessicator Reading Lamp Waffle Maker Coffee Maker புதிய Prestige Pressure Cooker Pyrex Dish என்பன விற்பனைக்குண்டு. 14, கொழும்புத்துறை, வீதி, சுண்டிக்குளி, (13047)

C, 70 ஹொண்டா சாலி விற்பனைக்குண்டு. தொடர்பு A. P. இராசரத்தினம் போதனாவைத்தியசாலை யாழ்ப்பாணம். (13133)

கோண்டாவில் டிப்போவிற்கு அண்மையில் 3பரப்புக் காணி சுற்றுமதில் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ஐ. ராசு, கொக்குவில்மேற்கு, கொக்குவில் (3437)

பாவிக்கப்பட்ட கூரை ஓடுகள், தேக்கம் கதவுகள், யன்னல்கள், நிலைகள், மரங்கள் என்பன விற்பனைக்குஉண்டு. இவை மீண்டும் பாவிக்கப் படக்கூடிய நல்ல நிலையில் உள்ளன. தொடர்புகொள்க; N. சுரேந்திரன், இல. 46, முதலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். சந்திக்கும் நேரம்; காலை 9 மணிக்கும் 10மணிக்கும் இடையில் 12-05-90இற்கு முன் தொடர்பு கொள்க. [3439]

### தேவை

றோல் பற்றிஸ் தயாரிக்கவும் புரியாணி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை நேரில்வரவும். றிக்கோ யாழ்ப்பாணம். (13132)

### Wanted

Wanted an Experienced Female Clerk for construction firm in Jaffna with experience for book-keeping and typing. please send your Bio-Data on or before 15th may, 90 to the Following Address, Salary Negotiable No-126, C/O Uthayan, Jaffna [13042

### Restaurant

யாழ் சைனீஸ் றெஸ்ற்ரோறன்ற், முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். அறைகளும் வாடகைக்கு உண்டு. [3430]

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைவ, உயர் வேளாள குல மகனுக்கு (வெளிநாட்டில் நிரந்தர தொழில் புரிபவர்) பெற்றோர் நல்ல குணமுள்ள அழகான, படித்த, ஆங்கிலம் பேசக்கூடிய 30 வயதுக்குட்பட்ட மணமகளை தேடுகின்றார்கள் 19-5-1990 இற்கு முன் விண்ணப்பிக்கவும், இல. 690 C/o உதயன் (3444)

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாளகுலப் பெற்றோர் லண்டனில் 7 ஆவது வருட Student Visa வுடன் C. I. M. A. சித்தி எய்தி Accountant ஆக தொழில் புரியும் 32 வயதும் 5' 6'' உயரமுள்ள அழகிய மகனுக்கு லண்டனில் வசிக்கும் அல்லது லண்டனுக்கு அனுப்பக்கூடிய வசதியுள்ள படித்த அழகிய மணமகள் எதிர்பார்க்கின்றனர் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 689 C/o உதயன். (3442)

### உணவுசேவை

உங்கள் நாளாந்த வைபவ ஓடர்களுக்கு (புரியாணி, பிறைட்றைஸ், நூடில்ஸ் வகைகள் சூப்வகைகள்) நாடவேண்டிய இடம் உங்களின் கிறில் - சைனீஸ்இன் இல 181, பலாலி வீதி, கோண்டாவில் பழைய இடத்தில் இருந்து, 200 மீற்றர் தொலைவில். (12999)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(பிலிமத்) கறுப்பு (வரி) சேவல் தனிச் சிவப்பு கறுப்பு சேவல், (LOHMAN)பிறவுண் சேவல்பிறவுண், கறுப்பு ,பேடு புறொயிலர் வான் கோழிக் குஞ்சுகள் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல, 9, கந்தையா லேன். சுன்னாகம் [புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3438)

### தவறிவிட்டது

27- 04-90 வெள்ளிக்கிழமை வல்லை வெளியில் 29 ஸ்ரீ 7685 மினிபஸ்ஸில் இருந்து மேற்குறிப்பிட்ட இலக்க மினி பஸ்ஸின் பதிவுப் புத்தகம் காணாமல் போய் விட்டன. கண்டெடுத்தவர்கள் 750 மினி பஸ் காரியாலயத்திற்கு அறிவிக்கவும். முகவரி: ஆர். குணரட்ணம், மாறாம்புலம், அல்வாய் வடக்கு. அல்வாய். (3440)

### A/L விலங்கியல்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II கரப்பான், தேரை விளக்கப் படங்களுடன் உள்ளடக்கிய அரிய நூல். ஆசிரியர் K. சங்கரஐயர், BSc வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (சி/4495)

## கிளிநொச்சி மாவட்ட ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கட்டட மற்றும் ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் 1990- 05 - 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக இக் கச்சேரியில் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு இத்தால் கோரப்படுகின்றனர்.

கே. மாணிக்கவாசகர்,
மாவட்ட ஆணையாளரும்,
அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சிமாவட்டம்.

கச்சேரி,
கிளிநொச்சி.
10 – 05 – 1990

(சி/5010)

## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்.

### அரிசியாலையில் ஒப்பந்த அடிப்படையில் கூலி வேலை செய்வதற்கான கேள்வி.

எம்மால் சுன்னாகம் மின்சார நிலையத்திற்கு அருகாமையில் நடாத்தப்படும் அரிசியாலையில் ஒப்பந்த அடிப்படையில் கூலி வேலை செய்வதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

வேலை விபரங்களையும், கேள்விப் பத்திரத்துக்கான விண்ணப்பப் படிவங்களையும், வேலைநாட்களில் எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி – 25 – 05 – 90

பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்,
07 – 05 – 90

(சி/ 4505)

# சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 29 00-22 00 | ரூ. 15.00-21.00 | ரூ. 22.00-24.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00-10 00 | ரூ. 3.00- 5.00 | ரூ. 10.00-12.00 |
| பயிற்றங்காய் | ரூ. 23.00-25.00 | ரூ. 18.00-20.00 | ரூ. 24.00-26.00 |
| பாகற்காய் | ரூ. 18.00-20 00 | ரூ. 20.00-22.00 | ரூ. 24.00-26.00 |
| கோவா | ரூ. 13.00 14.00 | ரூ. 13.00-14 00 | ரூ 16.00-18 00 |
| லீக்ஸ் | ரூ. 19.00-21 00 | ரூ. 23.00-24.00 | ரூ 25.00-26.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 19.00-20.00 | ரூ. 19.00-21.00 | ரூ. 25.00-26.00 |
| பீற்றூட் | ரூ. 5.00- 6.00 | ரூ. 7.00- 9 00 | ரூ. 14.00-16.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. — | ரூ 26.00-28.00 |
| பூசணி | ரூ. 5.00- 6 00 | ரூ. 3.50- 4 50 | ரூ. 6.00- 8.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 14.00-15 00 | ரூ. 11.00-13.00 | ரூ. 20.00-22.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 35.00-38.00 | ரூ. 35.00-38.00 | ரூ. 40.00-45.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 26.00-32 00 | ரூ. 26.00-35.00 | ரூ. 32.00-35 00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 29.00-50.00 | ரூ. 28.00-30.00 | ரூ. 30.00-32 00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 8.00- 9 00 | ரூ. 7 00- 8.00 | ரூ. 12 00-14.00 |
| வெண்டைக்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 17.00-20 00 | ரூ. 22.00-24.00 |

## புதிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. அதாவது விரிவுரையாளர்களை மட்டுமே நாம் வழங்குகிறோம். மற்றைய பணியாளர்கள், தாதிகள் சுகாதார அமைச்சின் கீழேயுள்ளனர்.

இந்த அடிப்படையிலேயே யாழ்ப்பாண வைத்திய பீடத்துக்குரிய போதனா வைத்திய சாலையும் அமையவேண்டும்;

இந்த விடயத்தில் சுகாதார அமைச்சை இணங்கச் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். அதன் பயனாகவே எதிர்வரும் 14 ஆம் திகதி மாநாடு கூட்டியுள்ளேன்.

இந்த மாநாட்டின் பயனாக நல்ல முடிவு ஒன்று ஏற்படும் என்று எதிர்பார்க்கிறேன்-- என்றார்.

யாழ்- பல்கலைக்கழகத்தில் பல் வைத்தியத்துறை அமைப்பது சம்பந்தமாக அவர் தெரிவித்ததாவது:--

யாழ். பல்கலைக்கழகத்தில் பல் வைத்தியத்துறையை அமைக்க அனுமதி வழங்குவது இயலாத காரியம். அதே நேரம் வெளிநாட்டு உதவியுடன் அமைப்பதானாலும் அங்கீகாரம்அளிக்க முடியாது.

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு பல்வைத்தியத்துறை அமைக்க அங்கீகாரம் வழங்கப்பட்டு திட்டம் கோரப்பட்டுள்ளது. பேராதனைப் பல்வைத்தியத் துறையை தரம் உயர்த்தவும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்த இரு பீடங்களுக்கு உரிய வேலைகள் முடிந்த பின்னர் தான் யாழ்ப்பாணம் றுகுனு பல்கலைக்கழகங்களைப்பற்றி யோசிக்கலாம். கொழும்பு பேராதனை ஆகியவற்றுடன் மேலும் இரண்டை ஆரம்பிக்க முடியாது.

பேராதனை, கொழும்பு பல் வைத்தியத் துறைக்கும் வெளிநாட்டு உதவி மறுக்கப்கப்பட்டுள்ளது -- என்றார் அவர். [அ-2 3]

## மருதனா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடத்தில் நடைபெறும். இந்தப் போட்டியைக் கண்டுகளிக்க ஆயிரக்கணக்கான சவாரிப்பிரியர்கள் அங்கு கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று பிரிவுகளாக சவாரிப் போட்டிகள் நடந்து முடிந்ததும், சவாரியில் முன்னணி வகிக்கும் பத்து வண்டில்களும் சுமார் ஐந்தரை மணியளவில் மருதனார் மடத்தில் இருந்து ஊர்வலமாக சுன்னாகம் மத்திய சந்தை மைதானத்தைச் சென்றடையும். அதைத் தொடர்ந்து அங்கு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

சுன்னாகம் கிராமசேவையாளர் திரு. க. வேலும் மயிலும் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஷப்றா இயக்குநரும், உதயன் வெளியீட்டகத்தின் நிர்வாக இயக்குநருமான திரு. ஈ. சரவணபவன் தம்பதிகள் விழாவில் கௌரவவிருந்தினர்களாகக் கலந்து கொள்வர்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சுன்னாகம் பொறுப்பாளர் திரு. சிவா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வலிகாமம் அரசியல் பொறுப்பாளர், திரு 'ஆஞ்சநேயர்' ஷப்றா யாழ் கிளை பொது முகாமையாளர் திரு. இ. ஸ்ரீ ரங்கநாதன், உதயன் வெளியீட்டகத்தின் பிரதம ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதன், வண்டில் சவாரி வித்தகர் திரு. இ. இளையதம்பி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

மாட்டு வண்டில் சவாரிப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி யசோதை சரவணபவன் பரிசில்களை வழங்குவார்.

சிவன் சிறுவர் பாடசாலையினர் வழங்கும் ''அசையும் சிலைகள்'' என்னும் நாடகமும், ராஜன்ஸ் இசைக்குழுவினரின் '' இதயகீதம் '' நிகழ்ச்சியும் விழாவில் இடம் பெறும்.

மாட்டு வண்டில் சவாரிப் போட்டியையும், விழாவையும் உடுவில் அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டுக் குழு, ஷப்றா-உதயன் நிறுவனங்களின் [illegible] யுடன் நடத்துகின்றன.

## 4 எதிர்க் கட்சி - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டப்பகலில் கனேடியத் தூதரகத்துக்கு முன் இக் கொலை நடைபெற்றிருக்கிறது. துப்பாக்கி ஏந்திய நபர்கள் எதுவித அச்சமும் இன்றி நடமாடி வருவது இதில் இருந்து தெரியவருகிறது.

மட்டக்களப்பில் அவர் மனைவி, பிள்ளைகள் கடத்தப்பட்டதும், வீடு கொள்ளையடிக்கப்பட்டதும் இடம் பின்பு பெற்றதான் அவர்கள் பயமுறுத்தல் காரணமாக கொழும்புக்கு வந்தனர்.

கொலைஞர் குழு கொழும்புக்கு வந்துள்ளது என்று அரசு எச்சரித்தது. பயமுறுத்தல் சூழ்நிலையில் இருந்த இவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இவரைப் பாதுகாக்க அரசு தவறிவிட்டது.

இப்படித் தெரிவிக்கப்பட்டது (இ-2 3)

## விடுதலை

புதுடில்லி, மே 10

வடஇந்தியாவில் உள்ள துவாரகாபீட சங்கராச்சாரிய ஸ்வாமிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டார்,

உத்தரப்பிரதேசத்தில் அயோத்தியில் ஸ்ரீராமர் ஆலயத்திற்கு அத்திவாரக் கல்லை நடச்சென்றசமயம் இவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப் பட்டிருந்தார்.

நேற்று விடுதலை செய்யப் பட்ட சங்கராச்சாரிய ஸ்வாமிகள் தனது பதினொரு சீடர்களுடன் வாரணாசிசென்றார்.

## நாவற்குழியில் சித்திரை பூரணை விழா

யாழ்ப்பாணம், மே 10

நாவற்குழி அறிவொளி மன்றம் சித்திரை பூரணை விழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகளை நேற்று நடத்தியது.

நாவற்குழி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் இந்தப் போட்டிகள் நடத்தப் பட்டன.

உறுப்பெழுத்து, இசைப் போட்டி, தமிழ்ப் பேச்சுப் போட்டி, ஆங்கிலப் போட்டிகள், பொதுஅறிவுப்போட்டி திருக்குறள் மனனப் போட்டி என்பன நேற்று நடைபெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகின்றன.

திரு. பொ, சுப்பையா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் சாவகச்சேரி உதவி அரசஅதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளை சிறப்புரை ஆற்றுவார்.

சங்கீத பூஷணம் திரு. ச. பாலசிங்கத்தின் இசைக்கச்சேரியும், '' சீதனக் கோரிக்கை இன்றய உலகில் அவசியமா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இன்று நடைபெற வுள்ளன. [ஒ]

## 31 ஆம் நாள் அஞ்சலி



### திருமதி வடிவேலு சரஸ்வதி

தோற்றம்: 17 – 04 - 1919 மறைவு: 10 - 04 – 1990

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்து எம்மை அன்புடன் ஆதரித்து உலகினிலே ஒளிபெறச் செய்து எம்மையெல்லாம் நீங்காத துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றீர்களே. உங்கள் ஆத்மா சாந்தியடைய வயிரவர் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[illegible]
சுன்னாகம்.

(13130)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

இந்தியா மெய்கண்டார் ஆதினம் ஈழத்தில் பெயர் சூட்டிய,
ஞானப்பிரகாசதம்பிரான்
[காரைநகர் - தொண்டர் அருளம்பலம்]
சுவாமிகளின் விதேக] முத்தி.

சுவாமிகளின் நினைவஞ்சலியில் நாம் குறிப்பிட வேண்டியமிக முக்கிய அம்சங்களாவன:

இந்துமதத்தின் ஆரம்ப வழியாகிய சைவ சித்தாந்தத்தையும் அதன் முடிந்த முடிவாகிய அத்துவித தத்துவத்தின் ஒழுங்குப் பாட்டையும் மக்கள் வழிபடும் வகையில் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றுள்ளவரும், முக்கியமாக சைவ சித்தாந்த தத்துவ வல்லுனருமாவர். ஆனால் தான் ஒரு ஸ்தாபனத்தை அமைத்து மக்களுக்கு குருத்துவமாக விளங்க வேண்டிய வாய்ப்பை பல சந்தர்ப்பங்களிலும் முனைந்தும் இழந்தது துர் அதிஷ்ட வசமென்பதை நம் போன்ற மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தொன்றாகும். சந்திரனில் இருள் இருந்த போதிலும் அதன் பிரகாசத்தில் இருள் கலக்காதது போல் சுவாமிகளின் உயர்ந்த சிந்தனைகளுக்கு நாம் என்றென்றும் அஞ்சலி செய்வோமாக!

வைத்திய கலாநிதி
வ. சின்னப்பு

சங்கராச்சாரிய சுவாமிகள் ஆச்சிரமம்,
திருப்புகழ் சுவாமிகள் அஸ்திலிங்கபீடம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
10 – 5 - 90

(13041)

## ஒரு வருட கண்ணீர் அஞ்சலி

### செல்வன் தி. அகிலன்

அன்னை மடியில் 1970 - 05 - 05 அரக்கர் பிடியில்: 1989- 05- 10

மகனே! மகனே! என்று அன்பு அம்மா தவிக்க
அகிலன்! அகிலன்! என்று அன்பு அப்பா கதற
நண்பா! நண்பா! என்று அன்பு நண்பர்கள் உருக
தம்பி! தம்பி! என்று பாசமுள்ள சகோதரர்கள் கலங்க
பாடசாலை, படிப்பு, விளையாட்டு என்று

சிட்டுக்குருவி போல் சிறகடித்துப்
பறந்து திரிந்த நீ
பாசமான எல்லோரும்
பரிதவித்து நிற்க
படு பாதகர்கள் உன்னை
படுகொலை செய்தனரோ.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்;
உன் பிரிவை மறக்க முடியாத
—பிரியமுள்ள சகோதரர்கள்

(13122)

## 2 ஆம் வருட நினைவஞ்சலி



### லெப்டினன்ட் இராமேஸ்வரன் (நிதி)

பிறந்த திகதி:- 27-11-1967 வீரமரணம்:- 10-05-1988

மண் மீட்புப் போரிலிலே முன்நின்று உழைத்த நிதி
பண்ணுகின்ற காரியத்தில் என்றும் அவன் ஜீவநதி
எம்மவரால் எமது மண்ணில் ஏற்படுத்திவிட்ட சதி
அந்நியப்படையினாலே உந்தனுக்கு இந்தக்கதி
கண்ணிமைக்கும் நேரத்திலே பிரிந்ததுவோ உன்னை விதி
விண்ணிலுள்ள வீரனை ஈழவரே என்றும் துதி

கொடிகாமம் மக்கள்.

அல்லாரை தெற்கு.
மீசாலை.

(3528)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கண்ணுள்ளார் காத லவராக வெய்துண்டல் அஞ்சுதும்
வேபாக்கு அறிந்து.

**பொருள்:**

எம் காதலர் நெஞ்சினுள் இருக்கிறார்; ஆகையால், மை எழுதினால் அவர் மறைவதை எண்ணிக் கண்ணுக்கு மையும் எழுதமாட்டோம்!

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

10 - 05 - 1990 த. பெ இலக்கம் 25

## அரசியல் செல்வாக்குக்கு ஆப்பு!

அரசாங்க சேவையில் அரசியல் செல்வாக்குக் கலக்கக் கூடாது என்பது இந்த நாட்டின் நீண்ட காலத் தேவை. அரச சேவை, நூற்றுக்கு நூறுவீதம் அரசியல் செல்வாக்கில் ஊறி வளர்ந்தது என்று கூறுமளவுக்கு இங்கு நிலைமை மோசமடைந்திருப்பது அப்பட்டமானது. இந்த நாட்டின் வளர்ச்சிக் குறைவுக்கும், பல பிரச்சினைகளுக்கும் மூல காரணமும் அதுவே.

சனநாயகம் உண்மையாக நிலை நாட்டப்பட வேண்டுமானால் அரசாங்கம், நிர்வாகத்துறை, நீதித்துறை என்பன ஒவ்வொன்றும் தன்னிச்சையாக, தன்னாதிக்கத்துடன் இயங்க வேண்டும். நீதித்துறையிலோ, நிர்வாகத்துறையிலோ அரசு தலையிடக்கூடாது. தனது செல்வாக்கைப் பயன்படுத்தவும் கூடாது.

ஆனால் பல நாடுகளில் நிர்வாகத்துறை, நீதித்துறை என்பனவற்றை அரசாங்கங்கள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முயல்வது உண்டு.

நிர்வாகத்துறையைப் பொறுத்த மட்டில் அதற்கும் நாடாளுமன்றத்துக்கும் - அரசாங்கத்துக்கும் - இடையில் புரிந்துணர்வுடனான இணைப்பும் ஒத்துழைப்பும் அவசியம். அரசாங்கங்கள் அதனைத் தவறாகப் புரிந்து கொண்டு நிர்வாகத்துறையைத் தமக்குள், தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றன.

அரசாங்கங்கள் வெல்லலாம்; தோற்கலாம். அவை வரலாம்; போகலாம். ஆனால் நாட்டின் நிர்வாகத்துறை இடைவெளி இல்லாமல், இடையூறு இல்லாமல் இயங்க வேண்டியது. இதனை உணராது அரசாங்கங்கள் நிர்வாகத்தில் தலையிடுவதும், செல்வாக்கைப் பிரயோகிப்பதும் இப்போது வழக்கமாகிவிட்டது.

இலங்கையில், நிர்வாகம் என்றால், அரசாங்க சேவை என்றால், அரசியல் தலையீடும், அரசியல் செல்வாக்கும் கலந்த ஒன்று ஆகிவிட்டது. எந்த அலுவலைச் செய்வதற்கும், அரசியல் செல்வாக்குத் தேவைப்படுகிறது. நல்லவற்றைச் செய்வதற்கும், நியாயமானதைச் செய்வதற்கும் நிர்வாகி தனது மனச்சாட்சிப்படி நடப்பதற்கும் அரசியல் தலையீடு இடையூறாக மாறுவதும் உண்டு. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொலிஸ், சுங்கம் போன்ற அரசாங்க சேவைகளில் உள்ள அதிகாரிகள் இப்படிக் கஷ்டப்படுவது உண்டு.

இவை எல்லாவற்றையும் விட நிர்வாகத்துறைக்கு உரிய, அரசாங்க சேவைக்குரிய ஆட்களை நியமனம் செய்வதிலும், பதவி உயர்வு வழங்குவதிலும் ''அப்பே ஆண்டுவ'' வந்த பின்னர், அரசியல் தலையீடும், செல்வாக்குமே முழுப் பங்கும் வகிக்கின்றன. சில காலமாகச் ''சிட்'' முறை என்ற சீர்கெட்ட வழி மூலம் அரசாங்க நியமனங்கள் செய்யப்பட்டன! அதாவது அரசியல்வாதிகளுக்குப் பந்தம் பிடித்தவர்களே முழுக்க முழுக்க அரசாங்க சேவையில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள். தகுதி இருந்தென்ன, திறமை இருந்தென்ன, அரசியல்வாதியின் ''துண்டு'' இருந்தால் தான் நியமனம் கிடைக்கும் என்ற வெட்கங்கெட்ட நிலை அது!!

அந்த முறை இப்போது இல்லையெனினும் அரசியல் ''அணைவு'' இல்லாமல் அரசாங்க சேவையில் ஓர் ''ஓடுகாலி'' வேலை பெறுவது கூடக் கஷ்டம் என்ற நிலைதான். எல்லாப் பதவிகளுக்கும் அவர்களின் ஆட்களே நியமிக்கப்படுகிறார்கள்.

இந்த நிலையை ஒழிப்பதற்கு ஜனாதிபதி திரு. பிரேமதாசா பிரத்தயனம் செய்யத் தொடங்கி உள்ளார் என்பது அண்மைக் காலமாகக் கேட்டுவரும் செய்தி அரசாங்கத் துறைக்கு, நிர்வாகத்துறைக்கு, திறமை, இனவிகிதாசாரம், ஆகிய அடிப்படைகளில் ஆட்களை நியமிக்கச் சமீபத்தில் முடிவாகியது. அந்த முடிவினை மேலும் வலுவுறச் செய்வதற்காக புதிய சட்டம் வரப்போவதாக இப்போது தகவல் கிடைத்துள்ளது.

அரசாங்க சேவைக்குரிய நியமனங்களில் எம். பிக்கள் தலையிட்டால் அவர்களைத் தேர்தலில் நிற்கத் தகுதியற்றவர்களாக்கும் அந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசரங்க நியமனங்களில் அரசியல்வாதிகள் தலையிடாமல் ஆப்பு வைக்கும் இந்த முயற்சி நல்லது; வரவேற்கப்பட வேண்டியது. அரசாங்க சேவையிலிருந்து ஊழலை ஒழிக்கவும், பாரபட்சம், மோசடிகளைக் களையவும் திறமை, துரிதம் நல்ல விளைவுகளை உருவாக்கவும் இது உதவும். சட்டம் சரிவர அமுல் செய்யப்பட்டால் நல்ல மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

எப்போதோ செய்திருக்க வேண்டியதை இப்போதாவது செய்கிறார்களே என்பதில் திருப்தி. அரசாங்க சேவையில் அரசியல்வாதிகள் தலையிடுவதை ஒழிப்போடு உயர் அதிகாரிகளின் செல்வாக்கும், தலையீடும் குறுக்கீடும் தடுக்கப்பட வேண்டும். அவ்வாறு செயலாற்றும் அதிகாரிகள் முறையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இல்லையேல் அதிகாரிகள் ஊடாக அரசியல் வாதிகள் செல்வாக்கைப் பிரயோகிக்கலாம் அல்லவா?

### ஓய்வூதியக்காரருக்கான ரூ.260
## வாழ்க்கைச் செலவுப்படி பற்றி எதுவித அறிவித்தலும் இல்லை

யாழ்ப்பாணம், மே 10

ஓய்வூதியக்காரர்களுக்கு 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி வழங்குவது பற்றி எந்தவித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்று திறைசேரி ஓய்வூதிய நிதி பிரதிப் பணிப்பாளர் திரு. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற செயலக அதிகாரிகள் குழுவிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அரசு எந்த வித முடிவும் எடுத்ததாக தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்ததாக அந்தக் குழுவினர் தெரிவித்தனர். (இ-3)

### கூட்டுறவு அடிப்படையில்
## சுய தொழில் வாய்ப்புத் திட்டம்:
## ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபா

யாழ்ப்பாணம் மே 10

சுயதொழில் வாய்ப்புத் திட்டத்தை கூட்டுறவு அடிப்படையில் மேற்கொள்ள ஏழு திட்டங்களுக்கு ஒவ்வொன்றுக்குமொரு லட்சம் ரூபா வழங்குள்ளது.

சுயதொழில் வாய்ப்பை அளிக்கும் வகையில் 10 பேர் கொண்ட கூட்டுறவு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்ததிட்டத்தை அரசாங்க செயலகம் நடைமுறைப்படுத்துகிறது.

இதற்கென முதலில் வந்த 10 லட்சம் ரூபாவில் அங்கீகாரம் பெற்ற 7 திட்டங்களுக்கு பணம் வழங்கப்பட்டது.

சில தினங்களில் மேலும் 3 திட்டங்களுக்கு நிதி வழங்கப்படவிருக்கிறது. (இ-3)

## எம். பி.யாக சுகுமார் நியமனம்

கொழும்பு, மே 10

மட்டக்களப்பில் இருந்து ஈழவர் ஜனநாயக முன்னணியின் புதிய எம். பியாக திரு. பொன்னுத்துரை சுகுமார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா அறிவித்திருக்கிறார்.

திரு. கனகரத்தினம் வரதராஜா என்பவரின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1988 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இவர்கள் இருவரும் சுயேச்சைக் குழுவின் (ஈரோஸ்) சார்பில் போட்டியிட்டவர்கள்.

புதிய எம். பியான திரு. சுகுமார், திரு. வரதராஜாவுக்கு அடுத்த அதிகபடியான வாக்குகளைப் பெற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## பயிற்சியின் பின்பே அலவன்ஸ்

கிளிநொச்சி, மே 10

பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவானோர் தமது 1000 ரூபா அலவன்ஸ் பணத்தை சேவைக்காலப் பயிற்சி முடிவடைந்த பின்னரே பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சேவைக்காலப் பயிற்சியை முடிப்பவர்கள் தமது விவரங்களை கல்வி அமைச்சுக்கு அனுப்ப வேண்டும் எனவும் இதன்பின்னரே அலவன்ஸாக 1000 ரூபா வழங்கப்படும் எனவும் தெரிய வருகின்றது. (ப-76)

## செயலகத்தில் இலங்கை வங்கிக்கிளை

யாழ். செயலகத்தில் இலங்கை வங்கிக் கிளையைத்திறக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக மூடப்பட்டுள்ள இந்தக் கிளையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கைஎடுக்கப்பட்ட போதிலும், பாதுகாப்புக் காரணங்களால் தாமதமாகி வந்தது அது.

இந்த விடயம் சம்பந்தமாக ஆராய்வதற்காக இவ்வார இறுதியில் செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது. (ஒ-3)

## பிள்ளைத் தமிழ் நூல் வெளியீடு

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரத்தின் ''இணுவில் செகராசப் பிள்ளையார் பிள்ளைத் தமிழ் நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை பி ப 3 30 மணிக்கு இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும்.

யாழ் பல்கலைக் கழக கலாநிதி சபா. ஜெயராசா தலைமையில் நடக்கும் இந்நிகழ்ச்சியில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

யாழ் பல்கலைக் கழக கலாநிதி இ. பாலசுந்தரம் வெளியீட்டுரையையும், கவிஞர் சோ. பத்மநாதன், திரு. க நாகேஸ்வரன். புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவார்கள். (இ-7)

## 'சிரித்திரன் சித்திரக்கொத்து' வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், மே 10

திரு. எஸ். சிவஞானசுந்தரத்தின் ''சிரித்திரன், சித்திரக் கொத்து'' நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

''திசை'' ஆசிரியர் திரு. மு. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நல்லை ஆதீன குருமஹாசந்தானம், அருட்தந்தை ஜெராட்ச விரிமுத்து, யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர். சி. சிவஞானசுந்தரம் (நந்தி). கலாநிதிநா. சுப்பிரமணியன், செங்கை ஆழியான், திரு. க. உமாமகேஸ்வரன், திரு. பொன். பூலோகசிங்கம்' திக்கவயல்.சி. தர்மகுலசிங்கம், சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை, திரு சந்திரபோஸ், அகளங்கன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. இ. முத்துத்தம்பி பெற்றுக் கொள்வார், (க-7)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 10

மயிலங்கூடல் ஞான வைரவர் ஆலயத்தில் நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நவோத்தரசத சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். (இ)

## வாசகர் திருமுகம்

### நியமனம் பெறாத 125 பட்டதாரிகள்

மாகாணசபையின் கீழ் பட்டதாரிகள் அனைவருக்கும் பயிற்சியளிப்பதற்காக திருகோணமலையிலுள்ள உட்துறையமைச்சின் அலுவலகத்தில் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 1 ஆம் திகதிவரை நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது இதில் 25, 26 ஆம் திகதிகளில் சமூகமளித்த பட்டதாரிகளின் தொகை அதிகமாக இருந்ததால் இரு பிரிவுகளாக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. இதில் ஒரு பிரிவில் சமூகமளித்தவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மறுபிரிவில் சமூகமளித்த 125 பட்டதாரிகளுக்கு இதுவரை நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை.

மேலும், வழங்கப்பட்ட நியமனங்களும் தகுதி அடிப்படையில் வழங்கப்படவில்லை. சங்கீதம், நடனம், கலைத்துறைப் பட்டதாரிகளுக்கு முகாமைத்துவ சிறப்புப் பயிற்சிகளும் முகாமைத்துவம் வணிகம் விஞ்ஞானம் ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்களுள் அனேகருக்கு ஆசிரிய நியமனமும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்களில் சிலர் மாகாணசபை அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ளவர்களால் தாம் விட்ட பிழைகளை ஒப்புக்கொள்ள முடிந்ததேயொழிய எதுவித பலனும் இல்லை. எனவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் மேற்படி 125 பட்டதாரிகளுக்கும் தகுதிக்கேற்ற நியமனங்களை கூடிய விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பாதிக்கப்பட்ட பட்டதாரி,**
அரியாலை.

### கோண்டாவில் கோயில் மணி

01-04-90 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளிவந்த உதயன் பத்திரிகை 6 ஆம் பக்கத்தில் ''இந்தியப்படையால் சேதமாக்கப்பட்ட கோண்டாவில் கோயிலுக்கு இங்கிலாந்திலிருந்து மணி'' என்ற தலைப்பில் எழுதப்பட்ட செய்தியில் இங்கிலாந்தில் உள்ள அன்பர் ஒருவர் மணி ஒன்றை அன்பளிப்புச் செய்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இது சரியல்ல. இம் மணியை அன்பளிப்புச் செய்தவர்கள் கனடாவிலும்' சுவிற்சலாந்திலும் வாழும் கோண்டாவில் மக்களும் வேறு அன்பர்களும் ஆவர்.

**தேவஸ்தான நிர்வாகக் குழுவினர்,**

## அராலி- கரைப்பிட்டி
## விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக மலர் வெளியீடு

அராலி -கரைப்பிட்டி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்வெளியீட்டு விழா தேவஸ்தான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு அறங்காவலர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

கோவிந்தசாமி புதல்வர்களின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சி. பத்மநாதன் மலர் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

டாக்டர் க. விக்னேஸ்வர சடாட்சன் , திரு. ம. சரவணபவ ஐயர், மானிப்பாய் கொத்தணி அதிபர் திரு. சி கேசவராஜன், திரு-பொன் சிவராசா, வட்டு கொத்தணி அதிபர் திரு. சி. தாஸ் திரு. க. கதிரேசு, திரு அ. சத்தியானந்தம், திரு. சு. செந்தில் நாதன், திரு வி. நாகலிங்கம், திருமதி த. பரமேஸ்வரி அம்மா, திரு. ப. சிவலோகநாதன், திரு. இ. சரவணபவன், திரு. எஸ். வி. கணேசு, திரு. க. மாணிக்கவாசகர், திரு. க. மாசிலாமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

### புலமைப்பரிசில் வழங்க ரூ. 25,000

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் ஏழை மாணவருக்கு புலமைப் பரிசில் வழங்க 25 ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டது· கொக்குவில் மேற்கு அமரர் திருமதி மாணிக்கம் பாக்கியத்தின் நினைவு தினத்தை முன்னிட்டு இந் நிதி கல்லூரி அதிபரிடம் கொடுக்கப்பட்டது. (இ-69)

## 80 அடிராட்சத புகைக்குண்டு தீப்பிடித்துக் கீழே விழுந்தது!

வல்வெட்டித்துறை மே 10

அண்மையில் வல்வை முத்துமாரிஅம்மன் வசந்த விழா இரவு நிகழ்ச்சிகளின் போது பலவர்ண வேடிக்கைப் புகைக் குண்டுகள் மேலே செலுத்தப்பட்டன.

சுப்பர் சித்தாராவின் இசை நிகழ்ச்சி இடம் பெற்றபோது உயரே கிளம்பிய 80 அடி ராட்சத புகைக்குண்டு ஒன்று எதிர்பாராமல் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது. சுவாலை விட்டு எரிந்தபடி வினாச்கிக்குளத்தடி மைதானத்துக்குச் சமீபமாக வீழ்ந்த போது வீடொன்றின் வேலி தீப்பிடிக்க உடனடியாகவே தீ அணைக்கப்பட்டது. (ப-160)

## செய்திக்கொத்து

### பண்பு பாராட்டும் விழா

யாழ்ப்பாணம், மே 10

மயிலங்கூடல் ஞானவைரவர் ஆலயத்தில் இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயதேசிகருக்குப் பண்பு பாராட்டும் விழா நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

சைவப் பெரியார் மு. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அருளுரை வழங்குவார். (இ-7)

### மட்டக்களப்பில் மழை

பட்டிருப்பு, மே 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டொரு தினங்களாக இரவு வேளைகளில் பலத்த மழை பெய்து வருகிறது. வரட்சியான இச்கால வேளையில் மழை பெய்வது பெரும் வரப்பிரசாதமென விவசாயிகள் பேசிக்கொள்ளுகிறார்கள். (இ-ரி)

### இன்னும் கிடைக்கவில்லை

முல்லைத்தீவு பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் இதுவரை திருப்பிக் கிடைக்கவில்லை.

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் இயக்கம் ஒன்றினால் இது எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. என்று கூறப்படுகிறது. 37ஸ்ரீ7006 இலக்கமுடைய இந்த உழவு இயந்திரம் இன்னும் கிடைக்கவில்லை.

இதனால் குப்பை கூழங்களை வாடகை இயந்திரம் மூலம் அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ப - 92)

### மீன் தட்டுப்பாடு

முல்லைத்தீவில், தற்போது மீனுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. காலநிலை காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்வதில்லை. இதேவேளை மரக்கறியும் அங்கு விலை ஏறியுள்ளது. (இ-92)

### ஒத்திவைப்பு

நாளை வெள்ளிக்கிழமை நெடுந்தீவு பிரதேச சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம் காலநிலை சீராக இல்லாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஏ. சீ. இராஜதுரை அறிவித்துள்ளார். (க 7)

## பொதுக்கூட்டத்தில் அமளிதுமளி!
## கழக நிர்வாகிகள் இழுத்துச் செல்லப்பட்டனர்!!
### திருகோணமலையில் சம்பவம்

பூஸா முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக திருகோணமலையில் அமைக்கப்பட்ட இளைஞர் புனர்வாழ்வுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அமளி துமளியில் முடிவடைந்தது.

திருகோணமலை புனித சவேரியார் பாடசாலையில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இக்கூட்டத்தில் கணக்கறிக்கை சம்பந்தமாக பிரச்சினை எழுந்தது.

இதனையடுத்து கழகத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இளைஞர்களால் ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்டு விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கழக நிர்வாகிகளை விடுதலைப் புலிகள் விசாரணை செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-ரி)

## முல்லைத்தீவில் இருநேரப் பாடசாலை

முல்லைத்தீவு, மே 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 7ஆம் திகதிமுதல் 12 பாடசாலைகள் இருநேரப் பாடசாலைகளாக இயங்க ஆரம்பித்துள்ளன.

ஆனால் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் உட்படச் சில பாடசாலைகளில் தவணை ஆரம்பத்திலிருந்தே மதிய உணவு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ92)

## முறைசாராக் கல்விப் பயிற்சி

1990 ஆம் ஆண்டு முறைசாராக் கல்வி நெறிகளான தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து, பனம் பொருள் உற்பத்திப் பயிற்சிகள் அண்மையில் யாழ் புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரி அதிபர் திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை தலைமையிலும் போதனாசிரியர்கள் திரு. த. கணேசமூர்த்தி, செல்வி செ. சிவகுசா ஆகியோரது மேற்பார்வையிலும் நடைபெற்றன.

## நாணய மாற்று விகிதம்

07-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.37 | 231.33 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002.80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண் | 6538.29 | 6653.52 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2398.16 | 2414.61 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பானிய யென் | 25.2162 | 25.4180 |

## கண்டதும் கேட்டதும்

சமீபத்தில் இரண்டு கண்களும் பார்வை இழந்த தமிழ் எழுத்தாளர் சாள்ஸ் ராஜ்குமார் என்பவர் கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு வந்திருந்தார். அவர் 4 தமிழ் நூல்களை வெளியிட்டு உள்ளார். ஐந்தாவது தமிழ் நூலான ''நான் காணும் உலகம்'' என்ற கலைப்படைப்பினை வவுனியாவில் வெளியிட உள்ளார். கல்லாதார் கண்கள் இரண்டு புண்கள் என்றார் வள்ளுவர்.

கண் இழந்த இந்த எழுத்தாளர் எழுதும் இத் தத்துவங்களைக் கண்டால் வள்ளுவர் என்ன கருதுவாரோ?

போராளி ஒருவரே தன்னைச் சிந்திக்க வைத்ததாகவும் உம்மால் சாதனை புரிய முடியும் எழுது'' என்று அவரே ஊக்கப்படுத்தியதாகவும் அடிக்கடி அந்த இறந்த போராளியை நினைவுபடுத்திக் கொள்கிறார் இவர்.

கண் ஒளி பொருத்தினால் என்ன என்று கேட்டோம்.

''மூன்றுவயதில் எனது கண்பார்வை பறிபோனது. அதனால் உலகத்தைக் கண்டு கொண்டேன். நான் இந்தப் பொறாமை மிகுந்த உலகத்தை மீண்டும் கண்களால் காண விரும்பவில்லை என்றார். அந்தத் தத்துவ எழுத்தாளர்!

அவரின் புனைப்பெயர் —தெருத்தூசியோன்

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைக்காக தன்னுயிரைத் தியாகஞ்செய்த
# தவப்புதல்வனின் ஓராண்டு நினைவுநாள்



தனயனாக
05
|
05
|
1970

தந்தைக்காக
10
|
05
|
1989

## திருச்செல்வம் அகிலன்

(சென். ஜோன்ஸ் கல்லூரி உயர் வகுப்பு மாணவன்)

### முதலாண்டு திதி: 28-05-1990

(முரசொலி ஸ்தாபக ஆசிரியர் எஸ். திருச்செல்வம், சென். ஜோன் பொஸ்கோ பாடசாலை முன்னாள் ஆசிரியை ரஞ்சிதமலர் திருச்செல்வம் ஆகியோரின் அருந்தவப் புதல்வனும், ஏக பிள்ளையுமாவார்)

கறந்தநற் பாலாயுள்ளம்
  கபடமற்றுறைந்துள்ளோனே
சிறந்தநன் நட்பாலெங்கள்
  சிந்தையில் நிறைந்துள்ளோனே
பறந்ததேன் உலகைவிட்டு
  பாவிகள் எம்மைவிட்டு
மறந்திடோம் உன்னை நாங்கள்
  மண்ணிலே வாழுமட்டும்,

கவிதை எழுதுகின்ற
  கண்ணான அகிலா இன்று
கவிதை ஆனாய் நீ
  கவியெழுத வரவில்லை
கீதை அளிக்கின்ற
  கிருஷ்ணனாய் நாம் எண்ண
பாதை மாறி நீயும்
  பால அபிமன்யு ஆனாயே.

பால்வடியும் அகிலன்முகம்
  பெருஞ் சீற்றத்தால் சிவக்கவில்லை
சேல்தனிலே செம்மையைநாம்
  சிறிதும் பார்க்கவில்லை
வால்தனைக் கொண்டு சுற்றி
  வாழ்வோரால் உந்தன்
பால்முகம் சிவப்பாகி
  பரிகசிக்க கண்டோமே.

மண்ணீராக இரத்தம்
  மறவன் நீ சிந்தியதால்
கண்ணீர் பெருக்கெடுத்து
  கரைபுரண்டு ஓடுதய்யா
தண்ணீர் பாடாய் உன்
  தளிருயிரை மதித்த அந்த
செந்நீர் வெறியர்தம்
  செந்தாகம் தீர்ந்ததுவோ?

ஆருயிரை மாய்த்தனரே
  அன்பினைச் சிதைத்தனரே
காரிருள் நாம்வாடக்
  காலாய் இருந்தனரே
சீரியராய் இல்லாமல்
  சிந்தை மறந்தனரே
ஆரிவர்கள் ஆனாலும்
  அறத்தமிழர்களேயல்ல.

சந்திர வதனமதை
  சந்திக்கு கொண்டேகி
இந்திர வடிவத்தை
  இல்லாமல் தானாக்கி
தந்திர நரிவேலை
  தான்செய்து எங்கள்
மந்திர மன்னவனை
  மறைத்து விட்டது ஏன்?

- நண்பர்கள்

எங்கள் அன்பு மகன் அகிலனின் முதலாம் ஆண்டு திதி 28-05-1990 திங்கட்கிழமையாகும். அன்று பகல் கனடா, ரொறன்ரோவிலுள்ள எங்கள் இல்லத்தில் அந்தணர் பங்கு பற்றும் மத அனுஷ்டான நிகழ்ச்சிகள் இடம்பெறும். மாலையில் அகிலனின் ஆத்ம சாந்திக்காக உற்றவர், உறவினர், நண்பர்கள் பங்குபற்றும் பிரார்த்தனை இடம்பெறும்.

**எஸ். திருச்செல்வம், ரஞ்சிதமலர் திருச்செல்வம்**
[பெற்றார்]

திரு. திருமதி எஸ். தருமகுலசிங்கம்
[சித்தப்பா குடும்பம்]

ரொறன்ரோ,
கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பியூட்டர் கல்வி

✶ Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

ஆரம்பம்: 12 May 1990

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) நேரம்: 1. 30 P. m.

**LOTUS 1-2-3**

ஆரம்பம்: 5 th May 1990

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.




**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, Power House Road, 2nd Lane, JAFFNA.

(சி-4363)


★ அமைதியின்மை நிலவும்

# இராணுவத்தில் களையெடுப்பு நடத்த அதிபர் கோர்பச்சேவ் நடவடிக்கை!

## யுத்த 'ஹீரோ'வாக ஸ்டாலினை ஏற்கவும் மறுப்பு!!

மாஸ்கோ மே 9

45 ஆண்டுகளுக்கு முன்னர் நாஸி ஜேர்மனியை வெற்றி கொண்ட தினத்தை இன்று (புதன்) சோவியத் இராணுவம் கொண்டாடியது.

மாஸ்கோ செஞ் சதுக்கத்தில் பிரமாண்டமான இராணுவ அணி வகுப்பு ஒன்று இன்று நடைபெற்றது. நவீன ஆயுதங்கள் மற்றும் போர்க் கருவிகள் அணி வகுப்பில் எடுத்துச் செல்லப்பட்டன.

இதற்கு முதல் நாள் நடந்த வைபவம் ஒன்றில் சோவியத் இராணுவத்தின் தற்போதைய நிலையை ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் கண்டித்தார்.

தனது மறுசீரமைப்புக் கொள்கைக்கு அமைய சோவியத் இராணுவம் அமைப்பிலும் சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கோர்பச்சேவ் தெரிவித்தார்.

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் யுத்த காலத் தளபதிகள் மத்தியில் திரு. கோர்பச்சேவ் பேசினார்.

நாஸி ஜேர்மனிக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியன் வெற்றியீட்டியது பற்றி பிரஸ்தாபிக்கையில், ''ஸ்டாலின் ஒரு யுத்த வெற்றி வீரர் என்று பழைமைவாதிகள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ள முடியாது'' என்று திரு. கோர்பச்சேவ் சொன்னார்.

1930 களில் சோவியத் இராணுவத்தில் ஸ்டாலின் நடத்திய களையெடுப்பு நடவடிக்கைகள் காரணமாக ஹிட்லரின் தாக்குதலை சமாளிக்க முடியாத நிலைமை சோவியத் இராணுவத்திற்கு ஏற்பட்டது என்று திரு. கோர்பச்சேவ் குறிப்பிட்டார்.

சோவியத் இராணுவத்தில் சீர்திருத்தஞ் செய்யவேண்டும் என்ற கோர்பச்சேவின் அறிவிப்பு, சோவியத்தில் இடம் பெற்று வரும் அரசியல் நடவடிக்கைகள் குறித்து அதன் ஆயுதப் படைகள் மத்தியில் அதிருப்தி உருவாகி வரும் தருணத்தில் வெளி வந்திருப்பதாக மாஸ்கோ வட்டாரங்கள் கூறின.

அரசியல் மாற்றங்களுக்கு எதிரான போக்கு சோவியத்தில் நிலவுவதையே திரு. கோர்பச்சேவின் பேச்சு எடுத்துக் காட்டுகிறது என்று அவதானிகள் கூறினர்.

சோவியத் இராணுவத்தில் 110 இனங்களைச் சேர்ந்தவர்கள் பணிபுரிகின்றனர்.

தனது அரசியல் சீர்திருத்துக்கு எதிரான போக்குக் கொண்ட இராணுவத்தினர் சதி முயற்சி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று பரவலாக செய்திகள் வெளியாகும் இத்தருணத்தில், இராணுவத்தில் களையெடுப்பு நடத்துவதே கோர்பச்சேவின் திட்டம் என்றும் மேற்குலக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ஏ)

★ மேஹம் இடைத்தேர்தல்:

# தேவிலால் மகன் சௌதாலா மீண்டும் போட்டியிடுகிறார்

மேஹம், மே 6

ஹரியானா முதலமைச்சர் ஓம்பிரகாஷ் சௌதாலா மேஹம் சட்டசபைத் தொகுதியில் வேட்புமனுத்தாக்கல் செய்தார்.

இம்மாநிலத்தில் மேஹம், தர்மாகலன், அம்பால ஆகிய மூன்று சட்டசபைத் தொகுதிகளில் மே 26 இல் இடைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதில் மேஹம், பிரச்சினைக்குரிய தொகுதி இத்தொகுயின் இடைத்தேர்தல் கடந்த பெப்ரவரியில் நடந்தபோது முதலமைச்சர் சௌதாலா போட்டியிட்டார். வன்முறை காரணமாக தேர்தல் ரத்துச் செய்யப்பட்டு, இப்போது மீண்டும் நடக்கிறது.

இம் முறை வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் சௌதாலா பேசுகையில் இடைத் தேர்தலில் 17ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றியீட்டுவேன். இல்லாவிட்டால் முதலமைச்சர் பதவியைராஜினாமாச்செய்வேன் என்றார்.

திரு. சௌதாலா துணைப் பிரதமர் தேவிலாலின் புதல்வர் ஆவார். (ப்)

## இளவரசர் சார்ள்ஸ் ஹங்கேரி விஜயம்

புடாபெஸ்ற், மே 9

பிரிட்டிஷ்இளவரசர் சார்ள்ஸும்அவரது மனைவி டயானாவும் ஹங்கேரிக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

வார்ஸோ நாடு ஒன்றுக்கு பிரிட்டிஷ் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் விஜயம் மேற்கொண்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்று சொல்லப்பட்டது. (ஏ)

## கம்யூனிஸ வீழ்ச்சியால் இஸ்லாம் பலவீனம்

அல்ஜியர்ஸ், மே 9

கம்யூனியத்தின் வீழ்ச்சி இஸ்லாமிய உலகைப் பலவீனப்படுத்திவிடும்என்றுஎகிப்து எழுத்தாளர் பாஹ்மி ஹெஎதி தெரிவித்தார்.

இஸ்லாமின் எதிர்காலம் பற்றிய மாநாடு ஒன்றில் இக்கருத்து வெளியிடப்பட்டது.

புதிய உலகப் படத்தில் இஸ்லாமிய உலகப் ஓரம் கட்டப்பட்டுவருகிறது என்றும் அவர் சொன்னார். (ஏ)

## அமைச்சர்களிடையே அழகுப் போட்டி!

கிழக்கு பேர்லின், 9

கிழக்கு ஜேர்மனியில் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று நடத்திய 'அழகு அமைச்சர்'போட்டியில் பிரதி பிரதமரும் உள்துறை அமைச்சர்பீற்றர்மைக்கல்டீஸ் ரெல் வெற்றி பெற்றார்.

வெளியுறவு அமைச்சர் மார்க்கஸ் மைக்கல் இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

அமைச்சர்கள் மட்டுமே போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். (ஏ)

## புதுடில்லியில் பாதுகாப்பு உஷார்

புதுடில்லி, மே 9

புதுடில்லியில் சீக்கியத் தீவிரவாதிகள் பெரிய தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக தகவல் கிடைத்திருப்பதைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகவலை உள்துறை இணையமைச்சர் நேற்று லோகசபையில் வெளியிட்டார். (ஒ-ஏ)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி. ஆறுமுகம் பார்வதி

எங்கள் அன்புத் தெய்வமே, இத்தினத்தில் தங்களுக்கு அஞ்சலி செலுத்தி, தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தங்களை நித்தம் நினைந்துநிற்கும்

மகள்:- திருமதி திரவியம்தவமணிதேவி

மகன்:- ஆறுமுகம் அருள்சோதி [கனடா]

'செல்லம் பூங்கா'
அல்வாய் மேற்கு,
அல்வாய். (12941)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி தவமணி செல்லத்துரை

வையத்துள்:- 17-02-1919 | தெய்வத்துள்:- 10-04-1990

அன்னைக்கு ஓர் ஆலயமே! அன்புச் சுடர் ஒளியே! எங்கள் அனைவரையும் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டுத் திடீரென இறைவன் அருளை ஆவலுடன் அரவணைத்துக் கொண்டீர்களே! எங்களைத் தாயும் தந்தையுமாய்ப் பாசத்தைப் பொழிந்து வழி நடத்திச் சென்றீர்களே! இனியும் உங்கள் ஆத்மா எங்களை துணை நின்று வழிநடத்திச் செல்லும் என்ற நம்பிக்கையில் கண்ணீரால அஞ்சலி செலுத்துகின்றோம் என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

மக்கள்: செ. யோகேஸ்வரன்,
(ப. நோ. கூ. சங்கம். நீர்வேலி)
செ. ஜெகதீஸ்வரன்,
(மக்கள்வங்கி, கன்னாதிட்டி.)
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வே. த. செல்லத்துரைவீதி,
உரும்பராய்:
10-05-1990. (3519)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. நாகலிங்கம் சவுந்தரநாயகம்

(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்)

தோற்றம் 2. 6. 1922 | மறைவு 10. 5. 1989

திதி 29. 5. 1990

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்,

'' தர்மவாசா ''
லோட்டன் வீதி,
மானிப்பாய். (3529)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## வி. ராதாகிருஷ்ணன் (ராதா)

(ரிங்கர்)

தோற்றம்: 22 – 11 – 1955 | மறைவு: 02 – 05 – 1988

திதி: 10 - 05 - 1990

என்றென்றும் மாறாத நினைவு உங்கள் நினைவு.
ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்.

171/அ[illegible]
யாழ்ப்பாணம். (3525)

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கிருஷ்ணபிள்ளை கந்தசாமி

(விளையாட்டுத்துறை அதிகாரி)

மலர்வு: 10 - 10 - 1926 | உதிர்வு: 07 - 05 - 1974

உலகுக்கு உத்தமராய். ஊர்கண்ட நல்லவராய், எமக்கெல்லாம் இனியவராய் வாழ்ந்து, எங்கள் வாழ்வும் ஏனையோர் வாழ்வும் வளம் பெறச் செய்தீர்கள். இதனைக் கண்டு சகிக்காத விதி சதி செய்து எம்மிடமிருந்து உங்களைப் பிரித்து விட்டது. நீங்கள் பிரிந்து பதினாறு வருடங்களானாலும் எல்லோர் உள்ளங்களிலும் தெய்வமாகப் பூசிக்கப்படுகின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள்

மனைவி: திருமதி கு. கந்தசாமி,

பிள்ளைகள்: க. இதயகுமார், ஜீவகா, கிரிஜா, வனஜா, சறோஜா, ஜதீஸ்குமார்.

மருமக்கள்: இராஜ்மோகன்,

பேரப்பிள்ளைகள்: சுறாஜ். றுகுணசாந்த், றுஷானி, சுஜிகலா.

''இதயபவனம்''
உடுவில்,
சுன்னாகம். [13112]

# அகிலன் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து ஓராண்டு...



செல்வன்

## ● அகிலன் திருச்செல்வம் ●

பிறந்தநாள்:- 05- 05- 1970 | இறந்தநாள்:- 10- 05- 1989

ஆண்டுத் திதி: 28- 05- 1990

(சென்ஜோன்ஸ் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)
மாணவத் தலைவன், கிரிக்கெட் அணியின் உபதலைவன்)

அலைபாயும் கடலாக நெஞ்சில் துன்பம்
அளவின்றிப் பெருகிடவே ஆக்கிச் சென்றாய்
மலை போலும் உறுதியுள்ள தந்தை சோர்வும்
மடை திறந்த அன்னை விழி நீரும் கண்டு
நிலையழிந்து நாம் கலங்கித் துவளுகின்றோம்.
நிர்மலனின் தாள் சேர்ந்த அகிலா! உன்றன்
தலைமை பெறு பண்புகளுக்கிடும் உண்டோ?
சாவரினும் உன் நினைவு சாகாதையா!
ஓராண்டு என்ன எத்தனை ஆண்டு சென்றாலும்
உம் நினைவு எம்மை விட்டு நீங்காதையா......

என்றும் அகிலன் நினைவுகளுடன் வாழும்;

அன்புள்ள அப்பா: எஸ். திருச்செல்வம்,
அன்பு அம்மா: ரஞ்சிதமலர் திருச்செல்வம்,
இறான் மம்மி, சித்தப்பா, அங்கிள்மார்,
அன்ரிமார், சின்னம்மா, பெரியம்மா,
அப்பா, அம்மா, வழிச் சகோதர சகோதரிகள்.
(13115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spoken English

ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை. உளவியல் ரீதியில் 90 நாட்களில் ஆங்கிலம் பேசும் பயிற்சி.

விபரங்கட்கு:

BRIGHT TRAINING CENTRE

P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.

# உதயன்

10 - 05 - 1990 வியாழக்கிழமை

Method of Book-keeping

கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும். ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.

விபரங்கட்கு:-

BRIGHT TRAINING CENTRE

P. O. BOX. 162, COLOMBO, SRI LANKA.

## பொலீஸார் இடமாற்றம் பெற தற்பொழுது வாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 10

பொலீஸ் சேவையில் ''பிளட்டுன்'' அமைப்பு முறை நிறுத்தப்பட்டதால் பொலீஸ் படையினர் இடமாற்றம் பெற வாய்ப்புக்கிடைத்துள்ளது.

பொலீஸ் சேவையின் ''பிளட்டுன்'' அமைப்பு முறையின் கீழ் 20 பேர் கொண்ட குழுவாக இயங்கும் நடைமுறை அமுலில் இருந்தது. இந்த அமைப்பின் கீழ் உள்ளவர்கள் தனியாக இடமாற்றம் பெறமுடியாது. முழுக்குழுவினருமே இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

இந்த அமைப்பு நிறுத்தப்பட்டதால் இனி தனி ஆளும் இடமாற்றம் செய்யப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (ஒ - 3)

## தவில் வித்துவான் கடலுக்குப் பலி

சுழிபுரம், மே 10

குளித்துக்கொண்டிருந்தவர் நீரில் மூழ்கி மரணமானார். திருவடிநிலையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மரணமானவர் சித்தன்கேணியைச் சேர்ந்த தவில் வித்துவான் எஸ். ஆர். கணேசன் ஆவார். [இ-28]

## மரண அறிவித்தல்கள்

### பிரமஸ்ரீ ச. வைத்தீஸ்வர ஐயர்

(ஈஸ்வர சுவாமிகள்)

கல்வியங்காடு நல்லூர் பிரபல சங்கீத வித்துவான் பிரமஸ்ரீ ச. வைத்தீஸ்வர ஐயர் (ஈஸ்வர சுவாமிகள்) அவர்கள் 09-05-90 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-05-90 புதன் மாலை 3.00 மணிக்கு நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்கவும்.

தகவல்:

மகள் திருமதி வைத்தியநாதசர்மா

கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(13127)

### நாகலிங்கம் சிவபாதசுந்தரம்

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பிராய் தெற்கில் வசித்தவருமாகிய நாகலிங்கம் சிவபாதசுந்தரம் [Retired Deputy Director Buildings Department Colombo, Consultant Engineer Zimbabwe) 06-05-90 Zimbabwe இல் காலமானார். இவர் செல்வமணியின் அன்புக்கணவரும், சுமித்திரன் (பொறியியல் மாணவன் U. K.); சுமித்திரா, சுதர்ஷா (Zimbabwe) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற நாகலிங்கம் முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலம்சென்ற உரும்பிராய் தெற்கு செல்வரத்தினம் பொன்னம்மாவின் அன்பு மருமகனும், சிவஞானப்பிரகாசம் (பிரதம கணக்காளர் நீர்வளசபை Nigeria) திருமதி பரமேஸ்வரி, சிவானந்தராசா (பொதுச் சுகாதார பரிசோதகர் மாரவில), சிவநாதன் (அஞ்சல் அலுவலக நுண்ணாய்வுப் பரிசோதகர் வவுனியா), சிவராசா (மாவட்டத் தொலைத்தொடர்புப் பரிசோதகர் கொழும்பு), சிவநேசன் (Canada). Dr. சிவரத்தினம் (கால்நடை வைத்தியர் பேராதனை). காலம் சென்ற சிவலிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சிவபாலன் (களஞ்சியப் பொறுப்பாளர் ''றேணு கா என்ரர் பிறைசேர்ஸ்'' கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற கிருஷ்ணமூர்த்தி (மின்சாரப் பொறியியலாளர் சுன்னாகம்). Dr. ஜெகநாதன் (பல் வைத்தியர் அரசினர் வைத்தியசாலை களுபோவல), பிறைசூடி (பிரதம இலிகிதர், வீதி அபிவிருத்தி சபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் Zimbabwe இல் நடைபெறும்.

தகவல்:

நா. சிவநாதன்.

''ஜெயபதி''
உரும்பிராய் தெற்கு

(3532)

### அண்ணாமலை சங்கரப்பிள்ளை

வேலணை வடக்கைச் சேர்ந்தவரும் அக்குரச பிரபல வர்த்தகரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, லதாகபே உரிமையாளருமாகிய அண்ணாமலை சங்கரப்பிள்ளை 9 - 5 - 90 (புதன் கிழமை) காலமாகிவிட்டார்.

இவர் காலம் சென்றவர்களான அண்ணாமலை நாகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வரும் பாலசரஸ்வதியின் அன்புக் கணவரும், ரமணி (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), சாந்தி (யா/ வே. வை. து. ம. வி) ஜெயந்தி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), சுரேஸ் (கனடா) சுகந்தி, கௌதமி (யா/ சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பையா, காலம் சென்ற நாகம்மா ஆகியோரின் மருமகனும், காலம் சென்ற பாக்கியலெட்சுமி, காலம் சென்ற சிவசுப்பிரமணியம் பரமேஸ்வரி, கணபதிப்பிள்ளை (விஜயா றேடிங் ஏஜன்சி கொழும்பு) நவமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலம் சென்ற குமாரசிங்கம், சரோசினிதேவி, தியாகராசா ருக்குமணிதேவி, சுப்பிரமணியம் நாகேஸ்வரி, காலம் சென்ற மங்கையற்கரசி, மனோசரன் (அக்குரச) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (10-5-90) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக வேலணை வடக்கு மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-

திருமதி சங்கரப்பிள்ளை.

வேலணைவடக்கு,
வேலணை.

[13131]

# ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவிதியை மக்களே தீர்மானிக்க வேண்டும்

## டாக்டர் அன்ரன் பாலசிங்கம் பேட்டி

கொழும்பு, மே 10

ஈ. பி. ஆர். எல். எவ்வின் அரசியல் தலைவிதியை எமது மக்களே தீர்மானிக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

—இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம்.

கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார். அந்தப் பேட்டியின் முக்கிய விவரங்கள் வருமாறு:

மாகாண சபையைக் கலைத்து தேர்தலை விரைவில் அரசு நடத்த வேண்டும். அதன் மூலம் நாம் தான் எமது மக்களின் அதிகார பூர்வமான பிரதிநிதிகள் என்பதை உலகுக்கு நிரூபிப்போம்.

அதன் பின்னர் நாம் பொருத்தமான அரசியல் அமைப்பு ஒன்று குறித்து அரசுடன் பேச்சுக்களை தொடங்குவோம்.

இந்திய இராணுவம் இருந்த சமயம் துப்பாக்கி முனையின் கீழ் யுத்த சூழ் நிலையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. இலங்கை அரசு கூட அதனை அப்போது எதிர்க்கவில்லை.

வடக்கு - கிழக்கு தேர்தலில் சகல தமிழ்க் குழுக்கள், அரசியல் கட்சிகளை கலந்து கொள்ள அனுமதி வழங்குவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் உறுதி அளித்துள்ளது.

சில தமிழ்க் குழுக்கள் மக்களை எதிர்நோக்கப் பயந்து, விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று கோருகின்றன.

இந்தக் கட்டத்தில் ஆயுத ஒப்படைப்பு என்ற கேள்விக்கே இடமில்லை. ஆயுத ஒப்படைப்பு என்பதை முன்நிபந்தனையாக வைக்க முடியாது. எம்மால் இதனை முற்றாக ஏற்றுக் கொள்ள இயலாது.

எமது நிலையை அரசுக்கு விளக்கிக் கூறி விட்டோம்.

மாகாண சபையைக் கலைத்து ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், அது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசியல் இடைவெளியை ஏற்படுத்தும், பாரதூரமான விளைவுகளும் அதனால் ஏற்படும்.

பரம்பரை தாயகத்தில் சொந்த நிர்வாகத்தை எமது மக்கள் நடத்தக் கூடியதான பொருத்தமான அரசியல் அமைப்புக்களை மிக விரைவில் இலங்கை அரசு ஏற்படுத்த வேண்டும்.

அரசியல் மற்றும் சித்தாந்த வேறுபாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ஈ. பி. ஆர். எல். எப்புக்கும் இடையே உண்டு என்பது உண்மை.

ஆனால் ஈ. பி. ஆர். எல். எவ்வின் அரசியல் தலைவிதியை எமது மக்களே தீர்மானிக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

ஆகவே ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கமும் அதன் தோழமை இயக்கங்களும் வடக்கு - கிழக்குக்கு வந்து சுதந்திரமாக தேர்தலில் பிரசாரம் செய்ய அனுமதிக்க நாம் தயாராக உள்ளோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்த ஒரே ஒரு இயக்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே. வலிமை பொருந்திய இந்திய இராணுவத்துடன் யுத்தம் ஒன்றையே விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்தியது.

வெளிநாட்டுப் படைகள் ஊடுருவல் செய்வதையோ, பிரசன்னமாகஇருப்பதையோ தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் வன்மையாக எதிர்க்கிறது.

வடக்கு - கிழக்கில் அரசு இயந்திரம் இயங்குகிறது. இலங்கை ஆயுதப்படைகள் உள்ளன. வடக்கு - கிழக்கில் பொலீஸாரும் பணிபுரிகின்றனர். ஆகவே அரசின் ஆணை வடக்கு - கிழக்கில் உள்ளது.

சரியான சட்டம்- ஒழுங்கு இப்பகுதிகளில் நிலை நிறுத்தப்படுவதற்கு மாகாண பொலீஸ்அமைப்புத் தேவைப்படுகிறது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் சில அதிகாரிகளும் 'றோ' உளவு நிறுவனமும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான குழுக்களுக்கு உதவும் நடவடிக்கையில் கொழும்பிலும் இந்தியாவிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு இந்தக் குழுக்கள் அச்சுறுத்தலாக இருக்கின்றன. ஆயுதங்களை நாம் தொடர்ந்து வைத்திருப்போம் என்று கூறுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

இலங்கை அரசுடன் விடுதலைப்புலிகள் இயக்கம் இரகசிய ஒப்பந்தம் எதுவும் வைத்திருக்கவில்லை. தமிழர் பகுதிகளில் அமைதியை மீண்டும் கொண்டு வருவது பற்றி ஓராண்டு காலமாக பேசியிருக்கிறோம்.

நாம் உளப்பூர்வமாக ஜனாதிபதியை நம்புகிறோம். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி இதயசுத்தியுடன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு அளித்து வருகிறோம்.

— இப்படி டாக்டர் பாலசிங்கம் சொன்னார். [உ-எ]

## சனசமூக நிலைய சமாஜத்தின் கூட்டம்

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் இடைக்கால விசேட பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10, மணிக்கு சமாசத் தலைவர் திரு. கோ. தியாகராசா தலைமையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சடாட்சர சண்முகதாஸ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகலாலா ஆகியோர் கலந்து கொள்வார்.

முன்னாள் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு த. ஆ. ரகுநாதன் சேவை நலன் பாராட்டி வைபவத்தில் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவார். (உ-51)

## பூங்காவனத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 10

யாழ்- வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய [நாச்சிமார் கோவில்] பூங்காவனத் திருவிழா நாளைவெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

அம்பாள் விநாயகர், சுப்பிரமணியர் சதேராக மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட நாக பூத்தண்டிகையில் வெளிவீதியுலா வருவார்.

பூங்காவனத் திருவிழாவின் இறுதியில் ஸ்ரீகாமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

நாதஸ்வர மேளக் கச்சேரி கலைமகலைவாணர் வில்லிசைக் [சின்னமணி] குழுவினரின் ''பார்வதி கல்யாணம்'' வில்லிசையும், வீணைக் கச்சேரியும் நடைபெறும். [க-51]

## ஷப்றா கிண்ணக் கிரிக்கெட்:

# 4 கழகங்கள் இன்று மோதும்

யாழ்ப்பாணம், மே 10

''ஷப்றா'' கிண்ணத்துக்காக ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் 'நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப் படுத்தப்பட்டஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நான்கு கழகங்கள் மோதுகின்றன.

யாழ்- இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சொக்ஸ் அணிக்கு எதிராக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதுகிறது. பகல் ஒரு மணிக்கு பற்றீசியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நொதேர்ண் விளையாட்டுக் கழக அணி மோதும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஷப்றா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூ கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதுகிறது. நண்பகல் ஒருமணிக்கு கிறாஸ்ஹொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் புளூஸ் அணி மோதுகிறது. [இ-3]

## ஆனையிறவு - தொண்டமனாறு வரை

# உவர் நீரை நன்னீராக்கும் ஆரம்ப வேலைகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், மே 10

ஆனையிறவில் இருந்து தொண்டமனாறு வரையான உவர்நீரை நன்னீராக்கும் பாரிய திட்டத்தில் ஆரம்ப வேலைகள் முடிவடைந்துள்ளன.

மாகாண சபை ஒதுக்கிய நிதியில் இருந்து 'ஒன்றரைலட்சம் ரூபா செலவிட்டு ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

இந்தத்திட்டம் வெற்றி அளிக்கும்வகையில் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிப்பதாகவும் இதற்கு ஏராளமான பணம் தேவை என்றும் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

மிக விரைவில் இந்த ஆய்வு அறிக்கை மாகாணசபைக்கு அனுப்பப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# அரச துறைகளில் மீண்டும் நியமனங்கள், பதவி உயர்வுகள்

கொழும்பு, மே 10

அரச துறைகளில் புதிய நியமனங்கள் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் ஆகியவிடயங்கள் இன்னும் ஒரு சில வாரங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த மார்ச் [illegible] நியமனம் மற்றும் பதவி உயர்வு வழங்கும் வேலையை அரசு இடைநிறுத்தி வைத்தது தெரிந்ததே.

மீண்டும் நியமனம் பதவி உயர்வு வழங்குவதை அரசு ஆரம்பிக்கவிருப்பதாக அமைச்சர் [illegible] மன்றத்தில் செய்தியாளர்களிடம் வெளியிட்டார். (உ-எ)

# எமது குறைகளை நீக்க எம்மைத் திருத்துவோமாக!

## ஜனாதிபதி வெசாக் செய்தி

கொழும்பு, மே 10

எமது குறைகளை அகற்றுவதற்குச் சிறந்தவழி எம்மைத் திருத்திக்கொள்வதில் தங்கியுள்ளது; பிறவழிகள் மூலம் அதனைச் சாதிக்க முடியாது என்று போதிமாதவன் கூறியுள்ளார்.

போதி மாதவனின் போதனைகளை எமக்கும் எமது தாயகத்திற்கும் பயன் தரக்கூடிய முறையில் அனுசரித்து நடக்க, இந்த வெசாக் பண்டிகையில் உறுதி பூணுவோமாக.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச விடுத்த வெசாக்தினச் செய்தியில்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வெசாக் தினச்செய்தியின் முக்கிய சாராம்சம் வருமாறு:-

தனிப்பட்ட ஆட்களின் உள் முரண்பாடு காரணமாகவே வெளிப்புற முரண்பாடுகள் தோன்றுகின்றன என்று புத்தர் போதித்தார்.

மாந்தர்களின் மனம் எல்லாப் பிரச்சினைகளுக்கும் பிறப்பிடமாக உள்ளதைப் போன்று, அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கருவியாகவும் மனமே உள்ளதென்று பௌத்த திருமுறைகள் கூறுகின்றன.

எமதுநாட்டை மீண்டும் கட்டி எழுப்பிக்கொண்டிருக்கும் இன்றையநாளில் இந்த உண்மையினை நாம் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.

இன்றைய உலகில் பிறரைப் பழிகூறுவதன்மூலம் எமது குறைகளைப் போக்கிக் கொள்ள முனைவது கவலைக்கிடமானது. எமது குறைகளை அகற்றும் சிறந்தவழி எம்மைத் திருத்திக்கொள்வதில் தங்கி உள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் எங்கள்தேசம் இடர்மிகு நிலையில் வாடிவதங்கியது. அன்புடைமை, பொறுமை, நேர்மை ஆகிய சீரிய பண்புகள் அந்த இடர்களைக் களைவதற்கு எமக்குத் துணை புரிந்துள்ளன.

எம்மைச் சூழவுள்ள அனைவருக்கும் நலனையும் இன்பத்தையும் பயக்கும் வகையில் மனநிறைவு, தியாக மனப்பான்மை, நல்லொழுக்கம் ஆகிய பண்புகளை அனுசரிக்க உறுதிபூணுவோம் — என்பதாகும். [அ]

# ஜனாதிபதியின் கண்டனம்

கொழும்பு, மே 10

நாடாளுமன்ற உறுப்பினர் சாம்தம்பிமுத்துவின் கொலை மிகக் கொடூரமானதாகும். அமைதியை விரும்பும் சகலராலும் அது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச விடுத்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பகையை பகையால் வெல்ல முடியாது. அன்பால் தான் வெல்லலாம் என்ற புத்தரின் வாக்கு இங்கு நினைவு கூரத்தக்கது. குற்றச் செயல்கள் கொடூரமான விளைவுகளை உண்டாக்கும். வன்செயல்களுக்கும், பயங்கரவாதத்துக்கும் ஊக்கமளித்தல், தூண்டுதல் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது அவற்றைஎதிர்த்து நிற்க வேண்டும்.

திரு தம்பி முத்துவின் மரணம் அதிர்ச்சியும் துயரமும் தருவதாகும். சிறந்த வழக்குனரான அவர் நாடாளுமன்ற விவாதங்களில் உற்சாகத்துடன் கலந்து கொண்டவர்.

சனநாயக பாரம்பரியம் தழைத்து ஓங்குவதற்கு அவர் ஆற்றிய பங்கு நீண்ட காலத்துக்கு நினைவு கூரத்தக்கவை. சம்பவத்தில் காயமடைந்த அவரது துணைவியார் குணமடைய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன் - என்று ஜனாதிபதியின் இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அபாய கட்டத்தைத் தாண்டினார்

கொழும்பு, மே 10

கொலையுண்ட சாம் தம்பிமுத்துவின் மனைவியார் கலா தம்பிமுத்து அபாயகட்டத்தில் இருந்து மீண்டுவிட்டார்என்றும் அவர்ஓரளவுசுயநினைவு பெற்றுள்ளார் என்றும் கொழும்பு வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. [இ-3-2]

# ஆந்திராவில் சூறாவளி பதினொரு பேர் பலி!

ஆந்திராமாநிலத்தை நேற்றுச் சூறாவளி தாக்கியது. அதன் காரணமாக அந்த மாநிலத்தில் பதினொருபேர் உயிரிழந்தனர். வீடு ஒன்று இடிந்து விழுந்ததால் 6பேரும் இரண்டுபேர் மின்சாரம் தாக்கியும் உயிரிழந்தனர்.

வேறு மூவர் கிருஷ்ணா மாவட்டத்தில் உயிரிழந்தனர்.

மசூலிப்பட்டினத்தில் கடல் நீர் ஊருக்குள் புகுந்தது. மணிக்கு 200 மைல் வேகத்தில் ஆந்திரக் கரையோரத்தை சூறாவளி தாக்கியதாக அறிவிக்கப்பட்டது.

வங்காள விரிகுடாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு 230 கிலோ மீட்டர் தூரத்தில் உருவாகிய பவன அமுக்கம் பின்னர் நகர்ந்து தமிழ்நாட்டுப் பக்கமாகச் சென்று இறுதியில் சூறாவளியாகி ஆந்திரக்கரையைத் தாக்கியது. [அ-எ]

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினசபாபதி கனகம்மா

இரத்தினசபாபதி கனகம்மா காலமானார். இவர் ஓய்வு பெற்ற வனபரிபாலன அதிகாரி இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், ஜெயக்குமார் (ப. நோ. கூ. ச. சாவகச்சேரி), ஜெயரூபி, சாந்தரூபி, செல்வக்குமார், செந்தில்குமார் (கனடா), இராஜரூபி இத்தாலி), இரத்தினகுமார் ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி சிவக்கொழுந்து (மகளிர் கல்லூரி, சாவகச்சேரி), பாஸ்கரன் (நீர்ப்பாசன இலாகா, கல்முனை) ஸ்ரீஸ்கந்தராசா (குவைத்), பிரேமானந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், மினேஸ், மகிழ்ந்தினி, மதனரூபன், பிரவீணா, பிரியாந்தி, பிரதீபா, ராஜாஜி, ராஜீவ் ஆகியோரின் அன்புப்பேத்தியும் ஆவார். அவரது ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மாலை 3½ மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

85, கண்டி வீதி,
சாவகச்சேரி.

தகவல்:

இ. ஜெயக்குமார்

(13134)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org